தமிழ் ஊடகப் பரப்பில் சாதனைகள் பல படைத்து
அர்ப்பணிப்புடன் மக்கள் மனதில் இடம்பிடித்து
இன்று அகவை 18ஐப் பூர்த்தி செய்யும்
வலம்புரி
Valampurii
நாளிதழ் குழுமத்துக்கு எமது வாழ்த்துக்கள்.
பணி சிறக்கட்டும்.
-எதிரொலி குழுமம்-

10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
## Ethiroli

குரல் 01 அதிர்வு 210 புதன்கிழமை டிசெம்பர் 20 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

# புளொட் அலுவலகத்தில் ஆயுதங்கள் மீட்பு




யாழ்ப்பாணம், டிசெம்பர் 20

புளொட்டின் அலுவலகமாக இயங்கிய வீட்டில் இருந்து துப்பாக்கிகள், அவற்றுக்கான ரவைகள், வாள்கள் உட்பட ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

யாழ். நகரில் வைத்தியசாலை வீதியில் முன்னர் இயங்கிய புளொட்டின் அலுவலகத்தில் இருந்தே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன. இந்த வீட்டைப் பயன்படுத்தி வந்த புளொட்டின் மூத்த முன்னாள் உறுப்பினர் சிவகுமார் (வயது – 55) என்பவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

06▶

# பிரதியமைச்சர் திடீர் விலகல்

கொழும்பு, டிசெ.20

உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் நிமல் லான்சா தனது பதவியை நேற்றுச் செவ்வாய்க்கிழமை திடீரென ராஜினாமா செய்தார்.

கம்பஹா மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான பிரதி அமைச்சர் நிமல் லான்சா அண்மைகாலமாக, அரசுடன் முரண் நிலையையே பேணி வந்தார். இந்த நிலையில் அவர் மகிந்த அணிக்குச் செல்வதற்காகவே தன்னுடைய அமைச்சுப் பதவியை உதறினார் என்று கூறப்படுகின்றது. (அ)

## ஆறாம் திருத்தம்
# 1705
## சட்டத்தரணிகள் ஐ.நாவில் முறையீடு

நியூயோர்க், டிசெ.20

இலங்கையின் ஆறாம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக, ஆயிரத்து எழுநூற்றி ஐந்து சட்டத்தரணிகள் ஐ.நாவில் முறையீடு செய்துள்ளனர். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத் 06▶

## பாடசாலை அனுமதிக்கான
# வெட்டுப்புள்ளி வெளியானது

கொழும்பு, டிசெ.20

2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு தரம் 6 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான தமிழ் மற்றும் சிங்கள மொழி பாடசாலைக்கான வெட்டுப்புள்ளிகள் பரீட்சை திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக வடமாகாணப் பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளி பின் 06▶



# “எனக்கு எதுவுமே தெரியாது”

யாழ்ப்பாணம், டிசெ. 20

புளொட்டின் முன்னைய அலுவலகத்தில் இருந்த ஆயுதங்கள் யாருடையவை?, அவை எப்படி வந்தன? என்பது குறித்து “எனக்கு எதுவுமே தெரியாது” என அந்த அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் கூறியி 06▶

## ஜூட் விட்டது கூட்டமைப்பு
# காத்திருந்து திரும்பினர் முஸ்லிம் காங்கிரஸினர்

மன்னார், டிசெ. 20

உள்ளூராட்சி சபைத் தேர்தலை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் கூட்டாக எதிர்கொள்வது குறித்து 06▶

## அமைச்சரின் செயலை அறிந்து
# ஆச்சரியமான மலேசியப் பிரதமர்

கொழும்பு, டிசெ. 20

ஐம்பதாயிரம் வரையிலான பெண் தலைமைக் குடும்பங்கள், 11 ஆயிரம் வரையான முன்னாள் போராளிகள், அங்கவீனர்கள் எனப் பலர் தேவைகளுடன் காத்திருக்கையில் அமைச்சர் ஒருவர் மிருகக் காட்சிப் பூங்கா அமைக்க 06▶



## வெளிநாட்டு நீதிபதிகளுக்கு
# இடமே இல்லை
## ஜனாதிபதி மைத்திரி உறுதி



கொழும்பு, டிசெ. 20

நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமே இல்லை என மீண்டும் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கொழும்பில் கலதாரி விடுதியில் நேற்று, நீதித்துறை அதிகா 06▶

## பிரபாகரன் குறித்த
# இறுவட்டுக்கள் மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 20

புலிகளின் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரலாறு அடங்கிய இறுவட்டுக்கள் சில மீட்கப்பட்டுள்ளன. இராமநாதபுரத்தில் விடுதலைப் புலிகளின் முன்னைய முகாம் ஒன்றி 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்
உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்


பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்
- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.


SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT டெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கோழிக் கூடுகளே வீடுகள்
# மாவடியம்மன் மக்கள் அவலம்

கிளிநொச்சி, டிசெ.20
"கிளிநொச்சி வட்டக்கச்சி புதுக்காடு மாவடியம்மன் கிராமத்துக்கு இதுவரை எந்தவொரு அடிப்படை உதவியும் கிடைக்க வில்லை. அதனால் கோழிக் கூடுகளையே வீடுகளாக்கி வாழ்ந்து வருகின்றோம் " என்று அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

"மீள்குடியேற்றத்தின் பின்னர் நாம் இந்த இடத்துக்கு வந்த போது இந்த இடம் வனவளத் திணைக்களத்துக்குச் சொந்த மானது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். ஆனாலும் இறுதியில் தீர்ப்பு எங்களுக்குச் சாதகமாகவே வழங் கப்பட்டது.

நல்லாட்சி அரசு வந்தவுடன் 100 நாள் வேலைத்திட்டத்தினூடாக காணி உறுதி களும் எமக்கு வழங்கப்பட்டன.

அப்படியிருந்தும் எமக்கு எந்தவொரு அடிப் படை வசதிகளும்இதுவரை செய்து தரவில்லை. தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் வரு வார்கள் . உங்களுக்கு நாங்கள் அனைத்து வசதிகளும் செய்து தருகிறோம் என்று சொல்லிச் செல்வார்கள். தேர்தல் முடிந்தால் எம்மை திரும்பி பார்க்கமாட்டார்கள் .

இங்குள்ள சிலருக்கு வாழ்வாதாரமாக கோழிக்கூடுகள் வழங்கப்பட்டன. அந்தக் கோழிக்கூட்டில்தான் இப்போது நாங்கள் வாழ்ந்து வருகிறோம். மழை காலங்களில் பாம்புகள் விஷப் பூச்சிக்கள், கரடிகள், யானைகள் என்பன எங்களை அச்சுறுத்தி வருகின்றன. எனவே நாங்கள் அச்சமின்றி வாழ்வதற்கு வீடு, மின்சாரவசதிகள் என்ப வற்றை அமைத்துத் தர அரசும், அதிகாரிக ளும் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என அந் தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-13)

## கூட்டமைப்பே எங்கும் வெல்லும்!

### முன்னாள் மாகாணசபை உறுப்பினர் நம்பிக்கை

கொழும்பு,டிசெ.20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களை யும் கைப்பற்றும் எனக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மார்க் கண்டு நடராசா நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை தெரிவித்தார்.

"யுத்த சூழலில் தமிழினம் பல்லாயி ரக்கணக்கான உயிர்களை இழந்துள்ள துடன், தற்போது அந்த நிலைமை மாற்றமடைந்து தமிழினம் ஓரளவு தலை நிமிர்ந்து நிற்கின்றது. உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் தமிழ் மக்கள் இருக்கின்றார்களா என்பதைச் சர்வதேசம் உற்று நோக்கிக் கொண்டி ருக்கின்றது.எனவே, தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு கூட்ட மைப்புக்கு வாக்களிக்க வேண்டும். இதேவேளை, இந்த முறை நடைபெற வுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் பிரதேசங்களில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சிய மைக்கும்" எனக் குறிப்பிட்டார். (அ)

## இலங்கைக்குக் கடத்தவிருந்த கஞ்சா தமிழகத்தில் மீட்பு

இராமநாதபுரம்,டிசெ.20
இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 150 கிலோகிராம் கேரளக் கஞ்சா தமிழகம், இராமநாதபுரம் பகுதியிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது. அதன் பெறுமதி 20 இலட்சம் இந்திய ரூபாவாகும்.இந்த நிலையில் குறித்த கஞ்சாவினைக் கடத்த முற்பட்ட மூன்று பேர் தப்பிச் சென்றுள்ளனர்.அவர்க ளைக் கைது செய்வதற்கான நடவடிக் கைகளைஇந்தியப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## சித்தி பெறாவிட்டாலும் இனிமேல் உயர்கல்வி

கொழும்பு,டிசெ.20
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறும் மாணவ, மாணவியருக்கு 150 தொழிற் கல்விப் பாடசாலைகள் மூலம் கல்வி வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

பரீட்சையில் உரிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டு உயர் தரத்துக்குத் தகுதி பெற்றுக் கொள்ள முடியாத 20,000 மாணவ, மாணவியருக்கு இவ்வாறு தொழிற்கல்வி வழங்கப் படவுள்ளது. 13 ஆண்டு தொடர்ச்சி யான கல்வித் திட்டத்தின் ஊடாக இவ்வாறு 150 தொழிற் கல்விப் பாடசாலைகள் ஊடாகக் கல்வி வழங்கப்படவுள்ளது.

இந்தப் பாடசாலைகள் பற்றிய விபரங்கள் ஜனவரி மாதம் அறிவிக் கப்படவுள்ளது.கடந்த ஆண்டு இந்தத் தொழிற் கல்விப் பாடசாலை திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்ததாகவும், நாற்பது பாடசாலைகளில் ஆரம்பிக்கப் பட்ட இந்தத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் கல்வி யமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில் 26 தொழிற்கல்விப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளதாகவும் இந்தப் பாடங்களைக் கற்பிப்பதற்காக 2000 ஆசிரியர் கள் விரைவில் சேவையில் இணைத் துக் கொள்ளப்படவுள்ள தாகவும் கல்வி அமைச்சுத் தெரி வித்துள்ளது.

அடுத்த ஆண்டு முதல் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவ, மாணவியரையும் உயர் தரத்தில் இணைத்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு கல்வி அமைச்சு நடவடிக்கையெடுத்து வரு கின்றது. (அ)

## காரைநகரில் சுயேச்சைக் குழு



யாழ்ப்பாணம்,டிசெ.20
காரைநகர் பிரதேச சபைக்கான தேர்த லில் போட்டியிடமைனர் அப்புத்துரை என் பவரின் தலைமையில் சுயேச்சைக் குழுவினர் நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

எந்தக் கட்சியும் சாராமல், பிரதேச அபி விருத்தியை மட்டுமே முன்னிறுத்தி தாங் கள் போட்டியிடவுள்ளதாகவும், பிரதேச மட்டத்தில் மக்களின் ஆதரவுடன் நிச்சய மாக காரைநகர் பிரதேச சபையைக் கைப் பற்றுவோம் எனவும் குறித்த சுயேச்சைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (அ)

## ஐங்கரநேசனின் சகோதரி சுயேச்சையாக தேர்தலில்!



யாழ்ப்பாணம்,டிசெ.20
வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் சகோதரி திருமதி கோமதி ரவிராசா தலைமையில் சுயேச்சைக்குழு,நல்லூர் பிரதேச சபைக் கான தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்றுச் செலுத்தியது.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியர சர் க.வி.விக்னேஸ்வரனின் கரங்களைப் பலப்படுத்தவே தாம் தேர்தலில் களமி றங்குவதாக குறித்த சுயேச்சைக் குழுவின் தலைவரான திருமதி ஆர்.கோமதி தெரி வித்தார். (அ)

## வைரஸ் தொற்றால் பல்கலைக்கு பூட்டு




அநுராதபுரம்,டிசெ.20
அநுராதபுரம், ரஜரட்டைப் பல்கலைக்கழ கத்தின் மிகிந்தலை வளாகம் ஒரு வித வைரஸ் தொற்றுக் காரணமாக நேற்று செவ்வாய்க்கிழமையிலிருந்து மூடப்பட் டுள்ளது.

,எதிர்வரும் 26 ஆம் திகதி வரை குறித்த பல்கலைக்கழக வளாகம் மூடப்பட்டி ருக்கும் எனப் பல்கலை நிர்வாகம் அறிவித் துள்ளது. குறித்த வைரஸ் தொற்றால் மாணவர்கள் பல்ர் நோய்வாய்ப்பட்டுள் ளதாகவும், மேலும் அந்தத் தொற்று பரவாமல் இருக்கவே , குறித்த வளாகத் தைத் தற்காலிகமாக மூட முடிவெடுக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
புதன். 20 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

# சனி மாற்றமும் தேர்தல் மாற்றமும்

நேற்று சனிமாற்றம் என்று எல்லோரும் பதகளிப் பட்டார்கள். இந்த மாற்றத்தால் தங்களுக்கு என்னென்ன தீங்குகள் நேரப் போகின்றனவோ என்ற பயத்தில், சனிபகவானை 'ஐஸ்'பண்ணுவதற்காக கோயில்களில் அர்ச்சனைகள் அமோகமாக நடந்தேறின. 1.2 பில்லியன் கிலோ மீற்றர்களுக்கு அப்பால், தன் பாட்டுக்கு வளையங்களோடு சுற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு கோள், நம்முடைய வாழ்க்கையை அசைத்து விடும் என்ற நம்பிக்கை கொண்டவர்களே நம்மில் பலர். அதனால் தான் ஏழரைச் சனி, மங்கு சனி, பொங்கு சனி, தங்கு சனி, மரணச் சனி என்று 'சனி' என்றாலே வெல வெலத்து நடுங்குகிறோம்.

சரி, அது அவரவர்களின் நம்பிக்கையைப் பொறுத்தது. ஆனால் இந்த முறை தமிழர்கள் எல்லோருமே சனி மாற்றத்தைக் கட்டாயம் நம்பியே ஆகவேண்டிய நிலையினை உள்ளூராட்சித் தேர்தல்கள் உண்டாக்கி விட்டன.

வழக்கமாக, சனி மாற்றத்தின் போது சோதிட எதிர்வு கூறல்கள் மூலம் என்னென்ன ராசிக்கு என்னென்ன பலன் என்பதைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் இந்தத் தேர்தல் சோதிடத்தில் மட்டும் என்னென்ன சனிகள், எப்போது மாறுகின்றன, என்னென்ன பலனைத் தரப்போகின்றன என்பதைக் கண்டு பிடிக்கவே முடியாத காரியம். அதிலும் கூட்டமைப்பில் எந்தச் சனிமாற்றம் நிகழ்ந்தாலும், அதன் மூவர் அணி செய்கின்ற குழப்பங்களுக்கு தீர்வே கிடைக்காது என்பது போலவே நடக்கின்ற சம்பவங்கள் உணர்த்துகின்றன. மாநகரசபை மேயர் வேட்பாளர் தெரிவு பற்றி கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஒன்று கூறுகிறார், செயலாளர் வேறொன்று கூறுகிறார், பேச்சாளரோ இன்னொன்றைக் கூறுகிறார். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாற்றங்களோடு தான் தங்கள் நிலைப்பாட்டில் நிற்கிறார்கள். சனிபகவானாவது ஏழரை ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் மாற்றம் பெறுவார். ஆனால் இந்தப் பகவான்களோ நிமிடத்துக்கு ஒருமுறை மாறிக்கொண்டே இருக்கிறார்கள்.

சனிமாற்றம் என்ன மாற்றத்தைக் கொண்டு வருகின்றதோ இல்லையோ, தமிழ் அரசியல் பரப்பில் பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு முன்னதாக புகைந்து கொண்டிருக்கும் உட்கட்சிப் பிரச்சினையை, நடுத்தெருவுக்கு கொண்டுவரப்போகின்றது என்பது மட்டும் நிச்சயம். ஏனெனில் முன்னைய சில முடிவுகளில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், செயலாளரும், பேச்சாளரும், கூட்டமைப்பின் தலைவரும் இணைந்தே முடிவுகளை எடுத்திருந்தார்கள். அதனாலேயே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், எதுவும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் இப்போது உள்ளூராட்சித் தேர்தலில் உள்ளூராட்சி அமைப்புகளின் தவிசாளர்களாகவும், மேயராகவும் யாரை நியமிப்பது என்பதில் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டத்தினரிடையே ஒருமித்த கருத்தில்லை. ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்தவர்களையே தலைவராக்க வேண்டும் என்பதில் ஒற்றைக் காலில் நிற்கிறார்கள். அந்தப் பிடிவாதம் ஏனைய தலைமைகளால் நிராகரிக்கப்படும் போதும், அதற்கெதிராகச் செயற்படவே ஒவ்வொருவரும் முனைவர். அதனால் சனிமாற்றமோ அல்லது தேர்தல் மாற்றமோ எந்த மாற்றமென்றாலும், கூட்டமைப்பில் குறிப்பாகத் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே மிகப்பெரிய பிளவுகள் நிகழப்போகின்றன. நாடாளுமன்றத் தேர்தலின் போது கூட இரும்பாக நின்ற கட்சியும், கூட்டமைப்பும், மிகச் சாதாரணமான உள்ளூராட்சித் தேர்தலுக்காக அடிபடுவதும், பிளவுறுவதும் சனிமாற்றத்தின் பலன் தானோ?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# தீயில் கருகியது வீடு

வவுனியா,டிசெ.20

வவுனியா, கணேசபுரம் 40 வீட்டுத் திட்டப் பகுதியில் வீடொன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை தீயில் எரிந்து முற்றாக நாசமடைந்தது.

குறித்த வீட்டில் வசிக்கும் குடும்பத்தினர் வவுனியா நகருக்குச் சென்று வீடு திரும்பிய நிலையிலேயே அவர்கள் வசித்த தற்காலிக வீடு எரிந்த நிலையில் காணப்பட்டுள்ளது. அயலவர்கள் தண்ணீர் ஊற்றித் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்திருந்த போதும், வீட்டு உபகரணங்கள், உடு புடவைகள் என அனைத்துப் பொருட்களும் தீயில் எரிந்து நாசமாகின. இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமையைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(அ)

# வீட்டுத் தோட்ட பொருட்கள் வழங்கல்



புதுக்குடியிருப்பு,டிசெ.20

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியன இணைந்து சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் வாழ்வாதார விசேட கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்ட மரக்கன்றுகள்,உள்வீடுகள் மற்றும் உபகரணங்களை நேற்று செவ்வாய்க் கிழமை வழங்கி வைத்தன.

மேலும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மேற்குக் கிராம அலுவலர் பிரிவில் பத்துப் பயனாளிகளுக்கும், மல்லிகைத் தீவுக் கிராம அலுவலர் பிரிவில் பத்துப் பயனாளிகளுக்கும், சுதந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவில் பத்துப் பயனாளிகளுக்கும், உடையார்கட்டு வடக்குக் கிராம அலுவலர் பிரிவில் பத்துப் பயனாளிகளுக்குமாக மொத்தமாக 40 பயனாளிகளுக்கு தலா இரு பத்தையாயிரம் பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் ம. பிரதீபன் புதுக்குடியிருப்புப் பகுதி விவசாய போதனாசிரியர் பு .நிறோயன் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# திருவாசக விழா ஞாயிறன்று

வடமராட்சி, டிசெ.20

சந்நிதியான் ஆசிரமம் நடத்தும் வருடாந்த திருவாசக விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்கந்த பரமச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார். தொடர்ந்து பலாலி ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் திருவாசகம் என்னும் தேன்' என்ற தலைப்பில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. இதில் திருவாசகத்தில் பக்தி நெறி என்ற தலைப்பில் சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராசாவும் , திருவாசகத்தில் வாழ்க்கை நெறி என்ற தலைப்பில் உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் எஸ்.செந்தூரச்செல்வனும், திருவாசகத்தில் தத்துவம் என்ற தலைப்பில் ஊவா பல்கலைக்கழகப் பதிவாளர் எஸ் . சர்வேஸ்வராவும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்குட்பட்ட 160 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (அ-66)

# வீரதுங்கவிடம் தீவிர விசாரணை

கொழும்பு, டிசெ.20

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்யப்பட்ட போது இடம்பெற்ற மோசடிகள் குறித்து, மகிந்தவின் முன்னாள் செயலர் லலித் வீரதுங்கவிடம், நேற்றுமுன்தினம் நான்கு மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

2008 ஆம் ஆண்டு எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக 444 மில்லியன் ரூபாவுக்கு எட்டு சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்த விசாரணைகளுக்காக, லலித் வீரதுங்கவை சிறப்பு பொலிஸ் விசாரணைப் பிரிவு அழைத்திருந்தது.

நேற்றுக்காலை 9.45 மணி தொடக்கம், 1.45 மணிவரை அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன.

சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் மேர்வின் சில்வா தலைமையிலான அதிகாரிகள் இந்த விசாரணையை மேற்கொண்டிருந்தனர்.

ஏற்கனவே தேர்தல் காலத்தில் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் நிதியத்தில் இருந்த பணத்தை சில் துணிகள் வழங்குவதற்கு ஒதுக்கிய விவகாரத்தில் லலித் வீரதுங்க கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மனித உரிமைகள் தெளிவூட்டல் நிகழ்வு





வவுனியா,டிசெ.20

சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு வவுனியா கிராம அபிவிருத்தித் திணைக்களக் கேட்போர் கூடத்தில் மனித உரிமைகள் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வொன்று நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வன்னி மாவட்ட மனித உரிமைகள் இணைப்பாளர் சட்டத்தரணி ஆர். எல்.வசந்தராஜா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வின் போது, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கிருபாகரன், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வடமாகாண சமூகசேவைகள் பணிப்பாளர் வனஜா, சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர், மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## இன்று நாளும் கோளும்

20.12.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 05 ஆம் நாள்

துதியை மாலை 04.45 மணி வரை | பூராடம் பகல் 01.12 மணி வரை | அமிர்தயோகம்

இராகு காலம் 12.00 - 01.30 | சுபநேரம் 09.15 - 10.15 | எமகண்டம் 07.30 - 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைதி | ஆர்வம் | சுகம் | சினம் | முயற்சி | பரிவு | பாராட்டு | சிக்கல் | வாழ்வு | பொறுமை | அசதி | புகழ் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நடுவேயும் புலிகள் கல்வியைக் கைவிடவில்லை

## அமைச்சர் அனந்தி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.20

“நெருக்கடியான போர்ச்சூழலிலும் புலிகள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறியதில்லை. ஆனால் இப்போது போர் இல்லாத நிலையிலும்கல்வி, தடம் மாறிச்சென்று கொண்டிருக்கிறது” என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரி வித்துள்ளார்.

யாழ்.அல்லைப்பிட்டி பங்குத் தந்தை டேவிட் அடிகளாரின் ஏற்பாட்டில் நிறுவப்பட்ட தொழிற் கூடத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

“போருக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். அவை முழுவதுமாக வெளியே தெரிவதில்லை அவ்வாறான பிரச்சினைகள் குறித்து கதைத்து ஆலோசிப்பதற்கேற்ப இயல்பான சூழல் பெரும்பாலான வீடுகளில் இருப்பதில்லை என்பதே உண்மையாகும். அதன் காரணமாகவே பிரச்சினைகளில் சிக்கும் பெண்கள் விபரீதமான முடிவுகளை எடுக்கும் நிலையேற்படுகின்றது.

பெரும்பாலான பெற்றோர் தொலைக் காட்சி நாடகங்களுக்கு அடிமையாகக் கிடக்கின்றதைப் பார்க்க முடிகின்றது. உரிமைக்காக போராட்டத்தை நடத்தி இனவழிப்பிற்குள்ளாகிக் கொண்டிருக்கும் எம்மை இழந்து விட்ட உரிமை பற்றிய சிந்திக்க விடாமல் செய்கின்ற ஒரு திட்டமிட்ட செயற்பாடாகவே தொலைக் காட்சி நாடகங்கள் உள்ளன. அதைவிட இத் தொடர் நாடகங்களின் மூலம் மிக மோசமான கலாசார சீரழிவுகளும் எமது சமூதாயத்தில் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இத்தொடர் நாடகங்களைப் பார்ப்பதால் கிடைக்கும் அற்ப சந்தோசத்தை ஒவ்வொரு பெற்றோரும் தியாகம் செய்வதன் மூலம் தான் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்கு உதவமுடியும்.

போரை எதிர்கொண்டு வந்த நெருக்கடியான நிலையில் கூட விடுதலைப் புலிகள் கல்வியிலும் வெகுவாகக் கவனம் செலுத்தியிருந்தார்கள். இன்று கல்வியில் மிக மோசமான நிலையில் இருக்கின்றோம். ஒன்பது மாகாணங்களில் வட மாகாணம் ஒன்பதாவதாக இருக்கின்றது. ஆசிரியர்கள் தமது கடமையினைச் சரிவரச் செய்கின்ற போதிலும் பெற்றோர் தமது கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறுவதனாலேயே கல்வியில் பெரும் பின்னடைவினை நாம் சந்தித்து நிற்கின்றோம்” என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# திருமறைக் கலாமன்றத்தின் ‘கிறிஸ்மஸ் கீதங்கள்’ இன்று

யாழ்ப்பாணம், டிசெ.20

கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் வழங்கும் கிறிஸ்மஸ் கீதங்கள் சிறப்பு நிகழ்ச்சி இன்று புதன்கிழமை மாலை 5.00 மணிமுதல் இல 286, பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். மறைக்கோட்டக் குருமுதல்வர் அருள்பணி ஆர்.சி.எக்ஸ் நேசராஜா அடிகள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்.

நிகழ்வில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம், யாழ். புனித மரியன்னை பேராலயம், யாழ். புனித அடைக்கலநாயகி ஆலயம் ஆகியவற்றின் பாடகர் குழாம்கள், மற்றும் இரட்சனிய சேனை, திருமறைக் கலா மன்ற இசைக்கலைஞர்கள் ஆகியோர் வழங்கும் கரோல் கீதங்களும் திருமறைக் கலாமன்றக் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ)

# வட்டு.விபத்தில் பெண் சாவு

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

குறித்த பெண் தனது மகனுடன் உந்துருளியில் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.42 வயதுடைய சுப்பிரமணியம் தர்மினி என்ற பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்தார். காயமடைந்த 7 வயதுடைய அவரது மகன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ)

# மின்சார ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்


கொழும்பு,டிசெ.20

இலங்கை மின்சார சபைத் தொழிற் சங்கம்,கொழும்புப் புறக்கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்பாக இன்று புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளது.

நிலுவைக் கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதக் கொடுப்பனவுகள் என்பன இரத்துச் செய்யப்பட்டுள்ளதை எதிர்த்தே இந்தப் போராட்டத்தை நடத்துவதாக இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற் சங்கத்தின் இணைப்பாளர் ரஞ்ஜித் ஜயலால் சூரிய தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளாவிய ரீதியில் கடமையாற்றும் மின்சார சபை ஊழியர்கள் பங்கேற்கவுள்ளனர் எனவும், தங்களது கோரிக்கைக்கு உரிய பதில் வழங்காத பட்சத்தில் நாடாளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தினை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வல்லைக்குள் நீராடிய வாகனம்



யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்ப்பாணம் வல்லைப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டையிழந்த அரச திணைக்கள வாகனமொன்று வீதியை விட்டு விலகிக் கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது. நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலையே இந்த விபத்து இடம்பெற்றது. அதிவேகமே இந்த விபத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. வாகனத்தின் சாரதி காயமடைந்த போதும், தெய்வாதீனமாக உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. நேற்று மதியம் வரை குறித்த வாகனம் நீருக்குள் நீந்திய படியே காணப்பட்டது. (அ- 66)

# தேர்தல் பாதுகாப்புக்காக 15 ஆயிரம் பொலிஸார்

கொழும்பு,டிசெ.20

248 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் பொறுப்பேற்கும் பணி ஆரம்பமாகியுள்ளதைத் தொடர்ந்து, நாட்டில் சட்ட ஒழுங்கை பாதுகாப்பதற்காக 15 ஆயிரம் பொலிஸார் பணியில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்ட விதிமுறைக்கு அமைவாக நாட்டில் எந்தவொரு இடத்திலும் எத்தகைய தேர்தல் ஊர்வலமும் நடத்தப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஊர்வலம் நடத்தப்படுவது தொடர்பிலான சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் அத்தியட்சகரும் ஊடகப்பேச்சாளருமான சட்டத்தரணி ருவான் குணசேகர தெரிவித்தார்.

“எவரேனும் பொலிஸாரின் உத்தரவை கவனத்தில் கொள்ளாது ஊர்வலம் நடத்தினால் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகப் பொலிஸாரால் கைது செய்யப்படுவார்கள். அவர்கள் பிணையில் உடனடியாக விடுவிக்கப்படாது தேர்தல் முடிவடையும் வரையில் சிறையில் அடைக்கப்படுவார்கள்” என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)



# உது சில விறுககளின்ரை விளையாட்டு

இப்ப எங்கடை சனம் கொஞ்சங் கொஞ்சமா பொலித்தீன் பாவிக்கிறதைக் குறைக்கத் துவங்கிவிட்டுது. கடையளிலையும் கடைக்கார் “வாக்கைக் கொண்ணந்தினியளே சாமான் களைக் கொண்டு போக” எண்டு கேக்கத் துவங்கிவிட்டினம்.

இரண்டு நாளைக்கு முன்னம் வெள்ளை கடையிலை கடலை வாங்கினனான். அவன் அதை எனக்கு ஒரு கடதாசிப் பேப்பரிலை தான் சுத்தித் தந்தவன். வீட்டை கொண்டந்து குடுத்தால் அவை சுண்டலை ஒரு தகரப் பேணிக்கை போட்டிட்டுப் பேப்பரை முத்தத்திலை எறிஞ்சுபோட்டினம்.

நானும் முதலியும் தலைவாசலுக்கை கதைச்சுக் கொண்டிருக்கிறம், அந்தப் பேப்பர் காத்துக்கு ஓடிவந்து முதலீன்ரை காலுக்கை சிக்குப்பட்டிது. முதலியிலை ஒரு பழக்கம் எந்தப் பேப்பரைக் கண்டாலும் எடுத்து ஒருக்கா மேஞ்சுபோடுவன். அப்பிடி அதையும் எடுத்துப் பாத்திட்டு “அண்ணை! நீ அடிக்கடி சொல்லுற விசியத்தை, இப்ப தமிழர் ஆசிரியர் சங்கம் சொல்லியிருக்கு, வாசிக்கிறன் கேள் எண்டு அதை வாசிச்சான். அது போன வெள்ளிக் கிழமை டிசம்பர் 8ஆந் திகதிப் பேப்பர். வாசிச்சதிலை முக்கியமான பொயின்ருகளைச் சொல்லுறன் கேளுங்கோவன்.

“ஒலிபெருக்கிப் பாவனையினால் மாணவரின் கல்வி பாதிப்பு – இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

எமது பிரதேசங்களில் ஒலிபெருக்கிகளின் மிகையான சத்தத்தினால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆலயங்களில் மிகையான சத்தத்துடன் ஒலிபெருக்கிகள் அலறும் சத்தம் பல நூறு வீடுகளைத் தாண்டிப் பலருக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன. எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாமல் இரவு, பகல் என்று தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டிருப்பதால் கல்வி கற்கும் மாணவர்களும் , நோய்வாய்ப்பட்டுள்ள நோயாளர்களும் பெரிதும் அசௌகரியங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

இதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்துக் கட்டுப்படுத்துமாறு மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.” இதுதான் அதிலை கிடந்த முக்கியமான விசியம்.

கோயில் திருவிழாக்கள் துவங்கிவிட்டால் காணும். ஆளுயரமான கறுப்புப் பெட்டியள் ஐஞ்சு – பத்தைக் கொண்டு வந்து மரக்குத்தி மாதிரி எட்டுத் திக்கும் நிப்பாட்டி வைச்சிட்டு, ஒரு சாட்டுக்குப் ” பிள்ளையார் சுழி போட்டுக் காரியத்தைத் தொடங்கு..” எண்டு பாட்டைப் போட்டுத் துவங்கிவினம், கோயில் குளம் எண்டும் பாராமல் சினிமாப் பாட்டுக்களைப் போட்டுத் தள்ளுவினம். உதிலை சனத்துக்கு விசராக்கிற விசியம் என்னண்டால், காது கிழியப் பாட்டைப் போட்டு, பாட்டு இரசனையை வளக்கிறதுக்குப் பதிலா, பாட்டுப் போடுறாங்கள் எண்ட உடனை சனம் அந்தப் பாட்டு அவையின்ரை காதுக்கு எட்டாத இடத்துக்கு ஓடத் துவங்கிவிடுவினம்.

எல்லாத்துக்கும் ஒரு அளவிருக்கெல்லே? “அளவுக்கு மிஞ்சினால் எதுகும் நஞ்செடா?” – எண்டு அப்பு எதுக் கெடுத்தாலும் சொல்லுவர்.

அது மாதிரி சத்தமும் ஒரு அளவுக்குக் கூடினால் சனத்தின்ரை காதுச் சவ்வு வெடிக்குமெண்டு உந்தப் பாட்டுப் பெட்டி வைச்சிருக்கிறுதுகளுக்குத் தெரியாதே? சண்டை நடக்கிற காலத்திலை ஆமி போட்ட குண்டுகளின்ரை சத்தம் காதைக் கிழிச்சு இண்டைக்கு எத்தினைபேர் காது கேக்காமல் வாய் பேசாமல் இருக்கினம் தெரியுமே? உது கூடின சத்தத்தாலைதான் வந்தது. ஆமி போட்ட குண்டுச் சத்தத்தாலை உடனை சனத்துக்கக் காது கிழிஞ்சது. கோயில் வழியைப் போடுற பாட்டாலை கொஞ்சம், கொஞ்சமாகக் காது கிழியும். அவ்வளவுதான்.

சுற்றுப்புறச் சூழலை சத்தமும் மாசு படுத்துமெண்டு முதலி சொல்லுறான். தான் ஏதோ ஒரு பேப்பரிலையோ இல்லாட்டிப் புத்தகத்திலையோ வாசிச்சவனாம். அவன் சொல்லுறதைக் கேக்கக் கேக்க எனக்குப் பயமாக் கிடக்கு.

இது எங்கடை ஊரிலை இருக்கிற சாதாரண சனத்துக்கு விளங்கேல்லை. ஏனெண்டால் கோயில் நடத்திற அரைவாசி அருவரியள். அவைக்குத்தான் விளங்கேல்லை எண்டு வைப்பம் ஜீ.ஏ மாருக்குத் தெரியாதோ உந்த விசியம். அவைதான் அதைச் செய்ய வேனும் எண்டுதானே தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டிருக்கு.

கோயிலிலை பாட்டுப்பெட்டி வைச்சுத் திருவிழா செய்யச் சொல்லி ஒரு வேதத்திலையும் எழுதேல்லை. உது படிப்பில்லாத சில விறிசுகளின்ரை விளையாட்டுத்தான். எல்லாம் வில்லங்கமாத்தன் கிடக்கு.

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# என்னம்மா..இப்பிடிப் பண்றீங்களேம்மா?

●கற்பனை – ஸபர் அஹமட்

அன்புள்ள விளாடிமிர் புடினுக்கு..

ரஷ்யா என்ற அகண்ட தேசத்தின் ஜனாதிபதியான நீங்கள் எமது தேயிலைக்கு இப்படி ஒரு ஆப்பு சொருகிவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை..இறைவன் நல்லவர்களுக்கு அவர்கள் நினைக்காத இடங்களில் இருந்து உதவி செய்வான். ஆனால் எனக்கு மட்டும் நான் எதிர்பார்க்காத இடங்களில் இருந்தெல்லாம் சோதனை வந்துவிடுகிறது..

எனக்கு ஒரே படபடப்பாய் இருக்கிறது. இயற்கைச் சீற்றங்களால் தேங்காய் ஒன்று நூறு ரூபாயிற்கு மேல் விற்பனை செய்யப்படும் தென்னாசிய நாட்டின் ஒரே ஜனாதிபதியாக நான் இதை எழுதத் தொடங்கி இருக்கிறேன். நான் பதவிக்கு வந்த காலத்தில் இருந்து எமது கண்டி விகாரையின் பெரஹர வருவது போல சரியாய் ஒவ்வொரு வருடத்திலும் மே மாதங்களில் பெரு வெள்ளம் வந்துவிடுகிறது. ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்கின்றனர். கோடை விடுமுறை போல மே இல் மட்டும் வெள்ளம் வந்தாலும் பரவாயில்லை. போனஸாய் ஏகப்பட்ட இயற்கை அனர்த்தங்கள் வரிசை கட்டி நிற்க அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தாறுமாறாய் எகிற வெறுத்துப் போய் இருக்கிறேன். ஊடகங்களில் பார்த்து இருப்பீர்கள்.. அதிகமாய் வெள்ள நிவாரணக் கோஷ்டிகளை உற்பத்தி செய்த ஒரே நாடு நாம் தான். உலகத்துக்கு அதிகமாய் அகதிகளை உற்பத்தி செய்ததுக்கு அடுத்ததாய் நாம் செய்த சாதனை இது ஒன்று தான்.

ஐயா.. எமது நாட்டில் தேர்தல் வருகிறது. எனது கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த உங்களோடு நட்பாய் இருந்தவர்..இப்போது தனி வழியில் செல்கிறார். என் கட்சி உடைந்து இருக்கிறது. இந்த நேரத்தில் நாங்கள் ஏற்றுமதி செய்யும் தேயிலையில் வண்டு இருப்பதாய் கூறி எமது அடிமடியில் கைவைத்து இருக்கிறீர்கள்.

பாணில் பல்லி விழுவது, வட்டிலாப்பத்தில் ஸ்டெப்லர் பின் வருவது, பிரியாணியில் தலைமயிர் வருவது எல்லாம் தேசிய அடையாளங்களாய்ப் போன எமக்கு போயும் போயும் தம்மாத்துண்டு வண்டுக்காக வண்டு முருகன் கணக்காய் இத்தனை அக்கப் போரா என்று கவலையாய் இருக்கிறது. நாம் உங்களுக்குத்தான் உற்பத்தி செய்யப்படும் தேயிலையில் 25 வீதத்தை ஏற்றுமதி செய்கிறோம். ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். 150 ஆண்டுகால பிஸ்னஸ் இது. ஒரு நாளும் இல்லாத சீரழிவாய் எப்படி இப்படி வண்டு வந்தது என்று தெரியவில்லை.

மாதக்கணக்கில் மருத்துவக் கல்லூரிகளை மூடி வைத்தார்கள், தினம் தினம் புதிசு புதிசாய்க் கண்டு பிடித்து ஸ்ட்ரைக் செய்கிறார்கள், சொல்லொணா துன்பங்களை எனக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். பொருளாதார வழிகளை முடக்கி மக்களை அசௌகரியத்துக்குட்படுத்த முனையும் இந்தக் கும்பல் தான் வண்டையும் உங்கள் தேசத்துக்குப் பொதி செய்து அனுப்பி இருக்க வேண்டும்.

ஐயா....நான் ஜனாதிபதி அபேட்சகராய் அந்நாளில் அளித்த வாக்குறுதிகள் எல்லாம் தேர்தல் மேடைகளிலேயே தற்கொலை செய்து கொண்டுவிட்டன. தொட்டதெல்லாம் தொல்லையில் வந்து முடிகிறது. எனது கட்சி வேறு இரண்டாய் உடைந்து இருப்பதால் பிரதமரின் கட்சி தேர்தலில் வெல்லும் என்று ரிப்போர்ட்கள் சொல்லுகின்றன. எனது கட்சி தப்பித் தவறி மூன்றாவது நிலைக்கு வந்தால் என்ன ஐயா ஆகும்...? இந்தத் தேயிலையை வைத்து எதிர்க்கட்சிகள் அரசியல் செய்ய முன்னர் தடையை நீக்கி என் துயர் துடையுங்கள்.

நான் அமெரிக்காவுடன் அதிகம் சினேகபூர்வமாய் நடந்து கொண்டு விட்டேன்..தவறு தான்..மன்னியுங்கள்...கடந்த வருடம் உற்சாகமான ஒரு காலைப் பொழுதில் பேசும் போது உங்கள் நாட்டில் இருந்து இங்கே இறக்குமதியாகும் அஸ்பஸ்டோஸ் கூரைத்தகடுகளை 2020 இற்குள் ஒட்டுமொத்தமாய்த் தடை செய்வேன் என்று முழங்கினேன்.

வண்டு எல்லாம் ஒரு மேட்டரும் இல்லை..அஸ்பஸ்டோஸ் விவகாரத்துக்குத்தான் நீங்கள் இப்படி பதிலடி தருவதாய் எமது வேலை வெட்டி இல்லாத இணையத்தளங்கள் எழுதத் தொடங்கி இருக்கின்றன. ஐயா அஸ்பஸ்டோஸ் கூரைத் தகடுகளால் புற்று நோய் வரும் என்று அமெரிக்காக்காரன் தான் சொன்னான். இப்போது எங்களுக்கு செம தோஸ்த் அவன் தானே. திரும்பவும் அஸ்பஸ்டோஸை அனுமதிப்பேன் என்று அதிரடி காட்ட முடியாது..என்னை வைத்து காமெடி பண்ணிக் கொண்டாடித் தீர்த்துவிடுவார்கள். என்ன பண்ணுவது? பேசாமல் ஸ்ரீலங்கன் ஏர் லைன்ஸை எடுத்துக் கொள்வீர்களா? உங்களின் தேசிய விமான சேவையுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஸ்ரீலங்கனுக்கு மூன்று வருசமாய் நாங்கள் மாப்பிள்ளை தேடுகிறோம்.. ஒன்றுமே சரியாய் அமையாமல் கிழவியாகிக் கொண்டு இருக்கிறது... யோசனை செய்து பாருங்கள்... சரி.... எனது அமைச்சர்களான ரிஷாட் பதியுதீன் என்பவரும் நவீன் திஸாநாயக்க என்பவரும் உங்கள் பிரதிநிதிகளுடன் பேசுவார்கள்.அவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்து எமது தேயிலை மீதான தடையைத் தளர்த்துங்கள். எமது அமைச்சரால் தான் தேயிலை ஏற்றுமதி மீண்டும் சாத்தியமானது என்று அந்த அமைச்சர்களின் அடிப்பொடிகள் எல்லாம் சந்தோஷப்படுவார்கள்..நானும் மகிழ்ச்சியடைவேன். கவலை இல்லாத வாழ்க்கை தானே நமக்கு வேண்டும் மிஸ்டர் புடின் ?

இப்படிக்கு
அதிமேதகு ஜனாதிபதி
வண்டு மைத்திரி

# நாடு திரும்பினார் மலேசியப் பிரதமர்




கொழும்பு,டிசெ.20
இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட மலேசியப் பிரதமர் நஜீப் பின் துன் அப்துல் ரஸாக் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நாடு திரும்பினார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்று மலேசியப் பிரதமர் இலங்கை வந்திருந்தார். இதன்போது அவர், ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டார்.
மேலும், இலங்கைக்கும், மலேசியாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பிலும் இணக்கம் வெளியிடப்பட்டது. இதன் பின்னர் பல்வேறு கலாசார நிகழ்வுகளிலும், விருந்துகளிலும் பங்குபற்றிய மலேசியப் பிரதமர் நேற்றுக் காலை நாடு திரும்பிச் சென்றார். (அ)

## விபத்தில் சிக்கியது நீதிபதி குடும்பம்

கொழும்பு,டிசெ.20
சிலாபத்தில் ஏற்பட்ட வாகன விபத்துக் காரணமாக நீதிபதி ஒருவரும், அவரது குடும்பத்தினரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.
சிலாபம் - கொழும்பு பிரதான வீதியின் மாதம்பே, பம்பல பிரதேசத்தில் மோட்டார் வாகனமொன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதாலேயே குறித்த விபத்தேற்பட்டது.
சிலாபம், சிங்கபுர பிரதேசத்தைச் சேர்ந்த நீதிபதி கவீஷா நதீஷானி மற்றும் அவரது கணவர் மற்றும் அவரது மகள் ஒருவருமே விபத்தில் காயமடைந்தவர்களாவர். (அ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1844.12.20**

இலங்கையில் அடிமைகளை வேலைக்கு அமர்த்துவதற்கெதிரான சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.

## மருந்து விலை மீள உயர்வு

2016ஆம் ஆண்டு ஒக்ரோபரில் குறைக்கப்பட்ட மருந்துகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்தது.
இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலைச் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.
இதனடிப்படையில் 48 அத்தியாவசிய மருந்துகளின் விலைகளே தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. (அ)

## பரீட்சை எழுதச் சென்ற மாணவிகள் படுகாயம்



கொழும்பு,டிசெ.20
பதுளை - கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மாணவிகள் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.
இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருந்தமை யால் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்துக்குத் தோற்றுவதற்காகச் சென்ற போதே குறித்த மாணவிகள் பஸ் ஒன்றுடன் மோதுண்டனர். சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டார்.
விபத்து இடம்பெறுவதற்குச் சற்று முன்னரே குறித்த மாணவிகள் ஆசிரியரிடம் வீதியில் நின்றபடியே ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டமை அருகில் இருந்த வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.விகமெராவில் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## காட்டு யானைகள் அட்டகாசம்

திருகோணமலை,டிசெ.20
திருகோணமலை - நாவலடி கிராமப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசத் தினால் வீடுகளும், பயிர்ச் செய்கைகளும் நேற்றுமுன்தினம் இரவு பெரும் சேதத்துக்குள்ளாகின.
குறித்த கிராமத்துக்குள் நுழைந்த காட்டு யானை , அங்குள்ள குடியிருப்பு ஒன்றையும், பயன்தரும் வாழை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது.
விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் தமது அன்றாட வாழ்க்கை காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் பாதிக்கப்படுவதாக வும், பயிர்களை நாசம் செய்வதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.
மேலும், காட்டு யானைகளின் அட்டகாசத்திலிருந்து தங்களது குடியிருப்புக்களையும், பயிர்களையும் பாதுகாக்க, நாவலடிக் கிராமத்தைச் சுற்றி மின்சார வேலி அமைத்துத் தர வேண்டு எனவும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். (அ)



# பள்ளிக்குப் போக பின்னடிப்பு எதிர்காலத்துக்கு அச்சுறுத்தல்

மட்டக்களப்பு,டிசெ.20
'மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமாக ஆண் மாணவர்களே வரவு குறைவானவர்களாவும், எழுத, வாசிக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். இது எதிர்கால சமூகத்துக்கு அச்சுறுத்தலாக அமையும்' என மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தார்.
“மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் மாணவர்களின் இடைவிலகல், பாடசாலைக்கு ஒழுங்கான வரவின்மை போன்றன பெரும் பிரச்சினையாகவிருக்கின்றன.
அத்துடன், தரம் 9, 10 ஆகிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களே அதிகம் பாடசாலையினை விட்டு இடை விலகுகின்றவர்களாக, வரவு குறைவானவர்களாக இருக்கின்றனர். இதேவேளை, பெண் மாணவர்களை விட இரண்டு மடங்கான ஆண் மாணவர்கள் வரவு குறைவானவர்களாகவும், எழுத,வாசிக்க முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர்.
குறித்த செயற்பாடானது எதிர்கால சமூகத்துக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடும். இவற்றினைத் தீர்ப்பதற்குச் சமூகத்தோடு நெருங்கி வேலை செய்ய வேண்டியுள்ளது” எனவும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கூட்டமைப்பை விட்டு வெளியேறும் எண்ணமே இல்லை"

யாழ்ப்பாணம், டிசெ. 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறும் எண்ணமே புளொட்டுக்கு இல்லை. கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ளூராட்சி தேர்தல் ஆசனப் பங்கீட்டில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இப்படி அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

ஆசனப் பங்கீடு தொடர்பான கூட்டத்தில் இடைநடுவில் நேற்றுமுன்தினம் புளொட் வெளியேறியது. அத்துடன் கிளிநொச்சியின் பிரதேச சபைகளில் தேர்தலில் போட்டியிடாது என்றும் முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பங்காளிக் கட்சிகள் இடையே எந்தப் பிணக்கும் இல்லை. கூட்டமைப்பில் இருந்து ஒதுங்குவதாகவோ அல்லது பரிந்து சொல்வதாகவோ எந்த முடிவும் எடுக்கவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து புளொட் பிரிந்து செல்லாது தொடர்ந்தும் இணைந்தே செயற்படும்.

"உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான ஆசன பங்கீடு தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் தீர்வு எட்டப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனின் கருத்தால் சில பிரச்சினைகள் உள்ளன. ஆனால் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அந்த பிணக்குகளை நிச்சயமாக தீர்த்து கொடுப்பேன் என எமக்கு உறுதியளித்துள்ளார். - என்றார். (ச)

## தொடர்ச்சிகள்

### காத்திருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக் கட்டப் பேச்சு நேற்று நடக்க விருந்தது.

ஆனால் இந்தப் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தப் பேச்சில் பங்கேற்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் உலங்குவானூர்தியில் மன்னார் வந்து அலுவலகத்தில் காத்திருந்தனர். எனினும் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறுவதாக இருந்த சந்திப்பு பிற்பகல் 3.45 மணியாகியும் இடம்பெறவில்லை. காத்திருந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினருக்கு "வேட்பு மனு தொடர்பான தயாரிப்புப் பணிகள் இடம்பெறுவதால் சந்திப்புக்கு வரமுடியாது" எனத் தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். இதன்போது "தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போகும் நிலையைக் கைவிடவில்லை. போருக்கு முன்பாக முஸ்லிம் - தமிழ் மக்களிடையே இருந்த ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்துவோம்" எனக் கூறிச் சென்றார்.

இரு தரப்புக்குமான பேச்சு முகவராக இருக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரிடம் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பிரசன்னமாகாதது குறித்துக் கேட்டபோது இவ்விடயம் தொடர்பில் தனக்கு ஒன்றும் தெரியாது எனக் கூறினார். (ச)

### பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே இந்த இறுவட்டுக்களை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மக்களின் பாவனைக்கு விடப்பட்ட காணியில் வீடு கட்டுவதற்காக நிலத்தைத் தோண்டியபோது கொள்கலன் ஒன்று மீட்கப்பட்டது. அதனுள் 91 இறுவட்டுக்களும் 61 பாதுகாப்பு உறைகளும் மீட்கப்பட்டன. இந்த இறுவட்டுக்கள் தலைவர் பிரபாகரனின் வீரம், வாழ்வு என்பவற்றைக் குறிப்பனவாக உள்ளன எனக் கூறப்படுகின்றது.

இதேபோன்று முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் சுனாமி தொடர்பான ஆவணப் பட இறுவட்டு ஒன்றும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

### எனக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறார். புளொட் அமைப்பு முன்னர் அலுவலகமாகப் பயன்படுத்திய வீட்டில் இருந்து ஒரு தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் அந்தக் கட்சியின் மூத்த முன்னாள் உறுப்பினர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். இது தொடர்பில் அக்கட்சியின் தலைவர் சித்தார்த்தனை தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், " 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் புளொட் அமைப்பிடம் இருந்த சகல ஆயுதங்களையும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்படி அதற்கு பொறுப்பானவர்களுக்கு நான் உத்தரவிட்டேன். அதற்கமைய எங்களிடமிருந்த சகல ஆயுதங்களும் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும் - ஒப்படைக்கபட்டிருக்கும்.

இப்போது ஆயுதங்கள் மீட்கப்பட்ட வீடு புளொட் அமைப்பின் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டது உண்மை. ஆனால் 2012 ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறி விட்டோம். அப்போது நடந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் ஏற்பட்ட பிரச்சினையால், அந்த வீட்டைப் பயன்படுத்திய சிவகுமார் எங்களிடம் இருந்து ஒதுங்கி - விலகினார். ஆனால் தொடர்புகளைப் பேணி வந்தார்.

எனினும் மீட்கப்பட்ட ஆயுதங்கள் யாருடையவை? எங்கிருந்து அவை வந்தன? என்பது தொடர்பில் எனக்கு ஒன்றுமே தெரியாது. அதைப் பற்றி நான் அறியவில்லை என்றார். (ச)

### புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டில் வசிக்கும் ஒருவரின் வீட்டை புளொட் அமைப்பு அடாத்தாகப் பிடித்து தனது அலுவலகமாகப் பயன்படுத்தியது. பல வருடங்களுக்குப் பின்னர் நாட்டின் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வீட்டின் உரிமையாளர் தனது வீட்டை விடும்படி அமைப்பினரைக் கேட்டுள்ளார். இதையடுத்து 2011 ஆம் ஆண்டு அண்மைக்காலத்தில் அந்த வீட்டை புளொட் அலுவலகமாகப் பயன்படுத்தாத போதும், அந்த அமைப்பின் முன்னாள் உறுப்பினரான சிவகுமார் பயன்படுத்தி வந்தார். வீட்டின் உரிமையாளரிடம் வீட்டை ஒப்படைக்க மறுத்த நிலையில் நீதிமன்றை நாடி, அதன் உத்தரவின் பிரகாரம் பொலிஸார் வீட்டில் இருந்த பொருட்களை அகற்றியுள்ளனர்.

இதன்போதே அலுமாரி ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி - 01, மகசின்கள் - 06, ரவைகள் - 396, பிஸ்டல் - 01, அதற்கான மகசின்கள் - 03, கோல்சர் - 02, தொலைத்தொடர்பு சாதனங்கள் - 02, வாள்கள் - 02 என்பன மீட்கப்பட்டன. இதையடுத்து விசேட அதிரடிப் படை வரவழைக்கப்பட்டு, அப்பகுதி முழுவதும் முற்றுகையிடப்பட்டது. அத்துடன் தேடுதல் பணிகளும் மேலும் முடுக்கி விடப்பட்டதுடன், அந்த அமைப்பின் மூத்த உறுப்பினரும் கைது செய்யப்பட்டார்.

இராணுவ ஒட்டுக்குழுவாக புளொட் செயற்பட்டது எனக் குற்றச்சாட்டுக்கள் எழுந்த போது புளொட் அதனை முழுமையாக மறுத்து வந்தது. அத்துடன் அரசியல் நடவடிக்கைக்கு வந்த பின்னர் தம்மிடம் ஆயுதங்கள் எவையும் இல்லை என்றும் சாதித்து வந்தது.

இந்நிலையிலேயே அதன் மூத்த முன்னாள் உறுப்பினரிடம் இருந்து இவ்வளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

### வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிகளுக்கான கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

"நீதியை வழங்குவதில் சுதந்திரமாக தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான பின்புலமும், தீர்ப்புகளில் எந்த அரசியல் தலையீடுகளும் இல்லாத நிலையும் நாட்டில் உள்ளன என நம்புகிறேன். எந்த நேரத்திலும் வெளிநாட்டு நீதிபதிகளை கொண்டு வரக் கூடாது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது நீதித் துறையை நம்ப வேண்டும் என்று கூறி வந்திருக்கிறேன்.

சட்டமே மேலானது என்றும், நம்பகமான நீதியை நடைமுறைப்படுத்த எமது அரசாங்கம் அனுமதிக்கும் என்றும் சர்வதேச சமூகத்துக்கு விளங்கப்படுத்தியுள்ளேன். வெளிநாட்டு நீதிபதிகளின் ஆலோசனைகளின்றி, சட்டப் பணிகளை முன்னெடுக்க இங்கு போதுமான சட்ட அறிவுடையவர்கள் தேவையானளவு இருக்கிறார்கள். இதன் விளைவாக, பிரச்சினை தீர்க்கப்பட்டது.

ஐ.நா அமைப்புகள் அல்லது மனித உரிமைகள் பேரவை அல்லது எந்தவொரு நாட்டினதும் அரசாங்கம் எந்தவொரு நேரத்திலும் வெளிநாட்டு நீதிபதிகள் பற்றிய கருத்தை முன்வைக்கவில்லை. இது சுதந்திரமான - இறைமையுடைய நாடு என்ற வகையில், இலங்கை பெற்றுக் கொண்ட வெற்றியாகக் கருதுகிறேன்." - என்றும் அவர் தெரிவித்தார். (ச)

### வெட்டுப்புள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி- 170

வேம்படி மகளிர் உயர் பாடசாலை - 161

யாழ் . இந்து கல்லூரி- 159

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் -158

கொக்குவில் இந்துக்கல்லூரி-156

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி-156

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி- 155

விசுவமடு மகாவித்தியாலயம்- 155

சாவகச்சேரி இந்துக்கல்லூரி -155 (அ)

### ஆச்சரியமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுத்தது குறித்து அறிந்த மலேசியப் பிரதமர் ஆச்சரியப்பட்டுப் போனார்.

உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்த மலேசியப் பிரதமர் நஜீப் பின் அப்துல் ரசாக் நேற்று கொழும்பில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்துப் பேசினார்.

அரசாங்கத்தின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் விடுதி ஒன்றில் காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் நீடித்தது.

இதில், மலேசியாவுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பழைய உறவுகளை இருவரும் நினைவுகூர்ந்தனர். வடக்குத் தமிழர்களின் கல்விப் புலமை குறித்துப் பிரதமர் சிலாகித்துப் பேசினார். அத்துடன் இந்தச் சந்திப்பில் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பிலும் பல விவரங்களை முதலமைச்சரிடம் இருந்து மலேசியப் பிரதமர் கேட்டறிந்தார்.

வடக்கில் 62 ஆயிரம் ஏக்கர் நிலங்களை படையினர் ஆக்கிரமித்து நிற்கின்றனர் என முதலமைச்சர் சுட்டிக்காட்டினார். அத்துடன் அவர்கள் வணிகம், மீன்பிடி, விவசாயம், சுற்றுலா போன்ற துறைகளையும் ஆக்கிரமித்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார். இதனால் வடக்கு மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர் என்றும் மலேசியப் பிரதமருக்கு எடுத்துக் கூறினார்.

மேலும், 49 ஆயிரம் பெண் தலைமைக் குடும்பங்களும் 11 ஆயிரம் முன்னாள் போராளி குடும்பங்களும் , அங்கவீனர்களும் வடக்கில் உள்ளனர். இவர்கள் இராணுவ அண்மையால் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவர்களின் பிரச்சினையைத் தீர்க்க கூலும் நிதியத்தை உருவாக்கினால் நல்லது என முதலமைச்சர் தெரிவித்தார். அது தம் நாட்டில் 97 வீதம் வெற்றியளித்ததாக மலேசியப் பிரமர் கூறியதுடன் பொருளாதார வருமானம் குறித்து வினவினார்.

வருமானத்தைப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கம் 10 இல் ஒரு பங்கையே தருவதாகவும், மிகுதியை அமைச்சுகள், அமைச்சர்கள் மூலம் தாம் நினைத்தவாறே அரசாங்கம் செய்கிறது. அத்துடன் எங்கள் தேவைகளை அறியாது தமது தேவைகளை நிறைவேற்ற முயல்கிறார்கள். வடக்கில் 600 ஏக்கரில் மிருகக்காட்சிசாலைப் பூங்கா ஒன்றை அமைக்க அமைச்சர் ஒருவர் முயன்றது பற்றி முதலமைச்சர் கூறினார்.

இதைக் கேட்ட மலேசியப் பிரதமர் 50 ஆயிரம் வரையிலான பெண் தலைமைக் குடும்பங்கள், 11 ஆயிரம் வரையான முன்னாள் போராளிகள், அங்கவீனர்கள் எனப் பலர் தேவைகளுடன் காத்திருக்கையில் மிருகக்காட்சிப் பூங்கா அமைக்க விரும்புவது விசித்திரமானது எனச் சொன்னார்.

இறுதியில், வடக்கில் எந்தத் துறைகளில் முதலீடு, உதவிகள் செய்யலாம் என்பதை ஆராய மத்திய அரசாங்கத்தின் அனுமதியுடன் குழு ஒன்றை அனுப்பி ஆராய்ந்து உதவுவதாக முதலமைச்சருக்கு பிரதமர் உறுதியளித்தார். (ச)

### 1705 சட்டத்தரணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் முன்னெடுப்பில் உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைந்த 1,705 சட்டத்தரணிகள் தமது முறைப்பாட்டை கடந்த டிசெம்பர் 8 ஆம் திகதி ஐ.நாவில் தாக்கல் செய்தனர்.

அதில், இலங்கையின் அரசமைப்புச் சட்டத்துக்கான ஆறாம் திருத்தம் குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையின் 18, 19, ஆகிய உறுப்புகளில் உறுதியளிக்கப்பட்ட பேச்சுரிமையையும் மனசாட்சிச் சுதந்திரத்தையும் சுயநிர்ணய உரிமையையும் மீறுவதாகும் என்று இம்முறையீடு எடுத்துரைக்கின்றது.

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் ராம்சே கிளார்க், இந்தியாவில் சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.பி. சிவசுப்ரமணியம், மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் ஆகியோர் இம்முறையீட்டைத் தாக்கல் செய்தனர்.

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, பிரான்சு, சுவிற்சர்லாந்து, இந்தியா (தமிழ்நாடு, மகாராஷ்டிரம், கர்நாடகம், புதுடில்லி) தென்சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வழக்குரைஞர் மன்றத் தலைவர்கள், சட்டப் பேராசிரியர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள் உள்ளிட்ட உலகளாவிய 1,705 சட்டத்தரணிகள் இம்முறையீட்டுக்குச் சட்டப் பிரதிநிதித்துவம் வழங்கியுள்ளனர்.

இந்தச் சட்டப் பிரதிநிதித்துவம் இலங்கையில் புகழ் பெற்ற நீதிமன்ற விசாரணையின் போது, நினைவில் வாழும் பெருமக்கள் சா.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம், எம். திருச்செல்வம் உள்ளிட்ட 67 சட்டத்தரணிகள் வழங்கிய சட்டப் பிரதிநிதித்துவத்தை நினைவுபடுத்துவதாக உள்ளது. அந்த விசாரணையில்தான் இலங்கை அரசாங்கத்துக்குத் தமிழர்கள் மீது இறைமை கிடையாது என்று தமிழ்த் தலைவர்கள் வாதுரைத்தார்கள்.

சர்வதேச வழக்காற்றுச் சட்டமாக மதிக்கப்படும் ஐ.நா. பொதுச் சபை தீர்மானம் எண் 2625 (1970) என்பதற்கிணங்க சுதந்திர அரசு என்ற வடிவில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்த இயலும் என்றாலும், சிறிலங்காவின் அரசமைப்புச் சட்டத்துக்கான ஆறாம் திருத்தம் இதனைக் குற்றச் செயலாக்குவதாக உள்ளது.

டான் சந்திரசோமா - எதிர் மாவை எஸ். சேனாதிராஜா, செயலாளர், இலங்கைத் தமிழரசுக் கட்சி வழக்கில் 2017 ஏப்ரல் 8ஆம் நாள் வெளியிடப்பட்ட இலங்கை உச்ச நீதிமன்ற முடிவும் இப்போதைய முறையீட்டில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சுதந்திர அரசு வேண்டுமென அமைதியான முறையில் எடுத்துரைப்பதும் கூட அரசமைப்புச் சட்ட ஆறாம் திருத்தத்தின் உறுப்புக்களின் வழிவகைகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும் என்பதை மேற்சொன்ன உச்ச நீதிமன்றத் தீர்ப்பு காட்டுவதாக இம்முறையீடு வாதுரைக்கிறது.

இலங்கை அரசமைப்புச் சட்டத்துக்கான ஆறாம் திருத்தம் சுதந்திர அரசு வேண்டுமென அமைதியான முறையில் எடுத்துரைப்பதையே குற்றச் செயலாக்குகிறது என்றும், இது குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய அனைத்துலக உடன்படிக்கையில் உறுதியளிக்கப்பெறும் மனசாட்சிச் சுதந்திரத்தையும் பேச்சுரிமையையும் மீறுவதாகும் என்றும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சர்வதேச அளவில் நன்கறியப்பட்ட பல வழக்குகளையும் எடுத்துக்காட்டி வாதுரைத்து வருகிறது. (ச)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரயில் புரண்டது பலர் பலி!




வோஷிங்டென், டிசெ.20

அமெரிக்காவின் வோஷிங்டனில் இடம்பெற்ற ரயில் விபத்தில் பலர் பலியாகியுள்ளனர்.

வோஷிங்டன் அம்ட்ராக் பகுதியில் பயணிகள் ரயிலொன்று பால மொன்றிலிருந்து தடம் புரண்ட மையினாலேயே குறித்த விபத்து நேர்ந்தது. விபத்து இடம்பெற்ற வேளை ரயிலில் 75 பயணிகளும் 5 ஊழியர்களும் பயணித்துள்ளனர். இவர்களில் எத்தனைபேர் பலியாகியுள்ளனர் என்பது மீட்புப் பணிகளின் பின்னரே அறிவிக்க முடியும் என அரசு தெரி வித்துள்ளது.

இதன்போது காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். மீட்புப்பணிகளில் அமெரிக்கப் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

# வடகொரியாவின் தற்கொலைப் படை

வடகொரியா, டிசெ.20

வடகொரியாவின் தேர்ச்சி பெற்ற தற் கொலைப் படையினர் உலகின் முக்கிய நாடுகளில் ஊடுருவத் தயார் நிலையிலுள்ளதாக முன்னாள் வடகொரிய இராணுவ நிபுணர் ஜூ இல் கிம் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

வடகொரியாவில் எதற்கும் அஞ்சாத, மூளைச் சலவை செய்யப்பட்ட தற்கொலைப் படையொன்று இயங்கி வருகின்றது. வடகொரியா எந்த நாட்டுடனும் நேரடிப் போருக்கு ஒருபோதும் துணியாது எனவும், ஆனால் அந்த நாட்டின் இரகசியப் படை யொன்று உலக நாடுகளுக்குக் கடும் அச்சுறுத் தலை ஏற்படுத்தும் எனவும், வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன் இடுகின்ற உத்தர வுக்கு மட்டுமே இந்தப் படை கட்டுப்படு கின்றமையால் இதுவே அவரது மிகப் பெரிய பலமாகக் கருதப்படுகின்றது. குறித்த தற்கொலைப் படை மூலமே தற்போது உலக நாடுகளில் ஊடுருவிப் பெரும் சேதத்தை உருவாக்க வடகொரியா திட்டமிட்டுள்ளது - எனவும் அவர் தெரிவித்தார். (இ)

# அர்ஜுனின் அடுத்த வாரிசு

சென்னை, டிசெ.20

நடிகர் அர்ஜுன் முதன் முறையாகத் தனது இரண்டாவது மகளையும் சினிமாவில் அறிமுகப்படுத்தியுள்ளார்.

அர்ஜுன் தமிழ் சினிமாவில் 90களில் கொடிகட்டிப் பறந்தவர். தற்போது இவர் குணச்சித்திரக் கதாபாத்திரங்களாகத் தேர்ந் தெடுத்து நடித்து வருகின்றார்.

இரும்புத்திரை படத்தில் வில்லனாக நடித்து வருகின்றார். மேலும் இவர் தன் மகள் நடிக்கும் சொல்லி விடவா என்ற படத்தையும் இயக்கி வருகின்றார்.

இந்தப் படத்தின் தெலுங்குப் பதிப்புக்கான பத்திரிகையாளர் சந்தியில் அர்ஜுன் தனது இரண்டாவது மகளை அழைத்து வந்து அனை வருக்கும் அறிமுகப்படுத்தினார். (இ)

## குஜராத், ஹிமாச்சல் தேர்தல்

# பா.ஜ.க. வெற்றிக் கொடி



புதுடெல்லி, டிசெ.20

குஜராத், ஹிமாச்சலப் பிரதேசம் மாநிலங்களில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க, அபார வெற்றி பெற்றுள்ளது. குஜராத்தில் மொத்தமுள்ள 182 தொகுதிகளில் 99 இல் பா.ஜ., வெற்றி பெற்று, தொடர்ச்சியாக ஆறாவது முறையாக ஆட்சியமைக் கவுள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் இருந்த ஹிமாச்சலில், மொத்தமுள்ள 68 தொகுதிகளில், 44 தொகுதிகளை, பா.ஜ.க, கைப்பற்றியுள்ளது.

குஜராத்தில் காங்கிரசும், அதன் கூட்டணிக் கட்சிகளும் 80 தொகுதிகளைக் கைப்பற்றி, பாஜ.க வுக்கு கடும் சவாலை ஏற்படுத்திய போதும் பெரும்பான்மையை எட்ட முடியவில்லை. அதேவேளை இதுவரை காங்கிர ஸின் கோட்டையாக இருந்த ஹிமாச்சலப் பிரதேசத்தை முதன் முறையாகப் பா.ஜ.கவிடம் காங்கிரஸ் பறிகொடுத்தமை அந்தக் கட்சிக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை ஹிமாச்சலப் பிர தேசத்தில் பா.ஜ.க, சார்பில் முதல்வர் வேட்பாளராக களமிறக்கப்பட்ட, பிரேம் குமார் துமல் , காங்கிரஸ் வேட்பாளர், ராஜிந்தர் ராணாவிடம், 3,500 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். எனவே முதல்வர் பதவிக்கு வேறு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டிய சூழல் பா.ஜ.கவுக்கு ஏற்பட்டுள்ளது.

இரண்டு மாநிலங்களில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் மகத்தான வெற்றிகளை பெற்று பா.ஜ., ஆட்சி அமைக்க முக்கிய காரணமான இந்தி யப்பிரதமர் நரேந்திர மோடிக்கு பாராட் டுகள் குவிந்தபடி உள்ளன. (அ)

## மணமகளின் ஆடை

# கின்னஸ் சாதனை



பரிஸ், டிசெ.20

பிரான்ஸ் நாட்டில் மணப்பெண் ணுக்கு 8,095 மீற்றர் நீளத்தில் தயாரிக்கப் பட்டுள்ள திருமண ஆடை கின்னஸ் சாத னைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டில் ஒரு பெண் தனது திருமணத்துக்காக அணிந்த திருமண ஆடை 8,095 மீற்றர் நீளமானதாகும்.

குறித்த ஆடையை 15 தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் 2 மாதங்களாக வடிவமைத்தனர்.

11 ஆண்டுகளுக்கு முன்பு 1203.9 மீற்றர் நீள திருமண உடை தயாரிக்கப்பட்டது. தற்போது அதை விட மிக நீளமாக உருவாக்கப்பட்ட இந்த உடை புதிய சாத னையை நிகழ்த்தியுள்ளது. மிக நீளமாக இருக்கும் இந்த உடை பல துண்டுகளாக வெட்டி எடுக்கப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. அதிலிருந்து கிடைக்கும் பணம் அறக் கட்டளை நிறு வனங்களுக்கு வழங்கப்படவுள்ளது. (இ)

# 10 பேருக்கு பகிரங்கத் தூக்கு



பீஜிங், டிசெ.20

சீனாவில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் மத்தியில், கொலை, கடத்தல் மற்றும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட 10 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

சீனாவில் பிரபல விளையாட்டு அரங்கம் ஒன்றில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மத்தியில் வைத்து நீதித்துறையினரால் 10 முக்கிய குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குறித்த குற்றவாளிகளில் 10 பேர் போதைமருந்துக் கடத்தல், கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றங்களைப் புரிந்தவர்களாவர். கைவிலங்கிட்டபடி அழைத்துவரப்பட்ட இந்தக் குற்றவாளிகள், பொதுமக்கள் பார்க்கும்படி நிறுத்தப்பட்டு, அவர்களின் குற்றங்களையும் தண்டனை விவரங்களையும் ஒலிபெருக்கியில் பகிரப்பட்ட பின்னர் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது சீனா முழுவதும் உள்ள போதை மருந்துக் கும்பலைக் கட்டுப்படுத் தும் என நம்பப்படுகிறது. (இ)

## அகதிகள் கடத்தல்:

# 1,489 வருடச் சிறை

கிரீஸ், டிசெ.20

ஈராக், சிரியா அகதிகளைச் சட்ட விரோதமாக நாட்டுக்குள் கடத்திய வருக்கு கிரீஸ் நாட்டில் அதிகபட்ச மாக 1489 ஆண்டுகள் சிறைத் தண் டனை நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை விதிக்கப்பட்டது.



சிரியா, ஈராக்கில் உட்படப் பல் வேறு நாடுகளிலிருந்து மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைகின்றனர். பெரும்பாலா னோர் படகுப் பயணத்தின் மூலமும் இதர போக்குவரத்தின் மூலமாகவும் சட்ட விரோதமாக நாட்டுக்குள் நுழைகின்றனர். ஒரு சில கும்பல் அகதிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு லொறி மூலமும், ரயில் போக்கு வரத்து மூலமும் நாட்டுக்குள் கடத்துகின்ற னர். இந்த நிலையில் கடந்தாண்டு ஜூலை மாதம் கிரீஸ் பொலிஸார் அதிரடிச் சோதனை நடத்திப் பலரைக் கைது செய்தனர்.

இவர்களில் 23 பேர் குற்றவாளிகள் என அடையாளங் காணப்பட்டனர். குறித்த வழக்கில் குற்றவாளி ஒருவருக்கு அதிகபட்சமாக 1489 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

500 அகதிகளைச் சட்டவிரோதமாக நாட்டுக்குள் கடத்திய நபர் ஒருவருக்கே இந்த அதிகபட்சத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரட்மனை நெருங்கிய ஸ்மித்

சிட்னி, டிசெ.20

அசாத்தியமான துடுப்பாட்டத் திறனில் இருக்கும் அவுஸ்திரேலிய க் கிரிக்கெட் அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித், தரவரிசைப் புள்ளிகளில் டொன் பிராட்மனை நெருங்கியுள்ளார்.

பிரிஸ்பனில் 141 ஓட்டங்களை அடித்த ஸ்மித், பெர்த்தில் 239 ஓட்டங்கள் விளாசி இங்கிலாந்தின் நம்பிக்கைகளைக் குழிதோண்டிப் புதைத்தார்.

இந்த நிலையில் ஐ.சி.சி டெஸ்ட் துடுப்பாட்டத் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் ஸ்மித்தின் தரவரிசைப் புள்ளிகள் 938-லிருந்து 945 ஆக அதிகரித்துள்ளன. முன்பு 941 என்ற அதிகபட்ச புள்ளிகளை ஸ்மித் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இங்கிலாந்து முன்னாள் வீரர் லென் ஹட்டனுடன் ஐ.சி.சி தரவரிசைப் புள்ளிகளில் அனைத்துக் காலத்துக்குமான அதிகபுள்ளிகளைப் பெற்றவர்கள் பட்டியலில் டொன் பிராட்மனுக்கு அடுத்த இடத்தில் இருக்கிறார் ஸ்மித் .

தரவரிசையில் டொன் பிராட்மன் 961 புள்ளிகள் பெற்றிருந்ததே இதுவரை சாதனையாக உள்ளது. அவருக்குப் பின்னர் யாரும் 961 தரவரிசைப் புள்ளிகளைப் பெற்றதில்லை. ஸ்மித் தற்போது 945 புள்ளிகளுடன் 2 ஆம் இடத்தில் இருக்கிறார். அடுத்து வரும் போட்டிகளிலும் ஸ்மித் பிரகாசித்தால், டொன் பிரட்மனை முந்தும் சாத்தியங்கள் உண்டு. (அ)

# இலங்கை வீரர் மரணம்



கொழும்பு, டிசெ.20

இலங்கையின் பிரபல உதைபந்தாட்ட வீரரும், பயிற்றுவிப்பாளருமான பீ.டீ.சிறிசேன தமது 77 ஆவது வயதில் காலமானார்.

ராஜகிரிய ஒபேசேகரபுரவில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து அவர் காலமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மருதானை சங்கராஜா மஹா வித்தியாலயத்தின் ஊடாக இலங்கை தேசிய உதைபந்து அணிக்கு தெரிவான அவர், அணியின் தலைவராகவும் செயற்பட்டார்.அவர் சுமார் 63 ஆண்டுகள் உதைபந்து விளையாட்டில் ஈடுபட்டுள்ளார்.தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் பலவற்றை அவர் பெற்றுள்ளார். அவரது இறுதிக் கிரியை இன்று பொரளை மயானத்தில் நடைபெறும்.(அ)



# கிண்டலுக்கு வறுவல்

லண்டன், டிசெ.20

இங்கிலாந்து அணித் தலைவரான ஜோ ரூட்டை, முன்னாள் வீரர் பீட்டர்சன் கிண்டலடித்தற்கு ரசிகர்கள் அவரை வறுத்தெடுத்து வருகின்றனர். அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி இழந்துள்ளதால் வீரர்கள் மிகுந்த ஏமாற்றத்தில் உள்ளனர்.

இதற்கிடையில் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரான கெவின் பீட்டர்சன் தன்னுடைய ருவிட்டர் பக்கத்தில், தற்போது இங்கிலாந்து அணிக்கு தலைவராக இருக்கும், ஜோ ரூட்டை கிண்டலடிப்பது போன்று அவரது புகைப்படத்தை பதிவேற்றம் செய்து "அருமையான தலைவர்" என்று குறிப்பிட்டு அங்கதமாக நக்கலடித்திருந்தார்.

இதைக் கண்ட ரசிகர்கள் சிலர், ஆத்திரத்தில், "ரூட் ஒரு அற்புதமான தலைவர், உங்களிடம் இருந்து இது போன்ற பதிவை எதிர்ப்பார்க்கவில்லை, முதலில் நீங்கள் ஒரு தலைசிறந்த தலைவரா? கூடிய விரைவில் தான் ஒரு சிறந்த தலைவன் என்றும், மீண்டும் ரூட் நிரூபிப்பார். என்றும் ரசிகர்கள் பீட்டர்சனின் ருவிட்டுக்கு பதிலடி கொடுத்து வருகின்றனர். (அ)



# பாண்டியா சாதனை

புதுடெல்லி, டிசெ.20

இந்திய அணியின் சகலதுறை வீரர் ஹர்த்திக் பாண்டியா, ஒருநாள் போட்டிகளில் ஓர் ஆண்டில் அதிக விக்கெட் மற்றும் 500 ஓட்டங்கள் எடுத்து முன்னாள் வீரர் கபில்தேவின் 34 ஆண்டுச் சாதனையை சமன் செய்துள்ளார்.

இந்திய அணியின் வளர்ந்து வரும் சகலதுறை வீரரான ஹர்த்திக் பாண்டியா, இலங்கை அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் 2 விக்கெட்களை வீழ்த்தினார். இதன்மூலம், ஓர் ஆண்டில் 30 விக்கெட்டுகளுடன் 500 க்கும் மேல் ஓட்டங்கள் சேர்த்த இரண்டாவது இந்திய சகலதுறை வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

கடந்த 1983ஆம் ஆண்டு, இந்திய அணியின் முன்னாள் நட்சத்திரம் கபில் தேவ் 27 போட்டிகளில் 32 விக்கெட்டுகளுடன் 517 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.ஹர்த்திக் பாண்டியா 31 விக்கெட்டுகளுடன் 557 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன்மூலம், கபில்தேவின் 34 ஆண்டு சாதனையை ஹர்த்திக் சமன் செய்துள்ளார். (அ)

# நியூஸிலாந்து–மே. இந்தியா ஒருநாள் தொடர் ஆரம்பம்

வான்கரே, டிசெ.20

நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர், வான்கரேயில், இன்று ஆரம்பமாகவுள்ளது.

டெஸ்ட் தொடரில் 2-0 என வெள்ளையடிக்கப்பட்டபோதும் , மேற்கிந்தியத் தீவுகளின் ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியில் கிறிஸ் கெய்ல், எவின் லூயிஸ் போன்ற அதிரடி வீரர்கள் இடம்பெற்றிருப்பது நிச்சயம் பலத்தை வழங்கும். அதுவும் நியூஸிலாந்தின் குறுகிய தட்டையான மைதானங்களில் கிறிஸ் கெய்லின் தாக்கம் அதிகமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

எவ்வாறெனினும், டிம் சௌதி, ட்ரெண்ட் போல்ட் போன்ற சிரேஷ்ட வீரர்களுடன் மற் ஹென்றி, அடம் மில்ன், லொக்கி பெர்கியூஸன், டவ் பிரேஸ்வெல் உள்ளிட்ட வேகப்பந்துவீச்சு வரிசையை மேற்கிந்தியத் தீவுகள் எதிர்கொள்வது கடினமாக இருக்கும் என்றே எதிர் பார்க்கப்படுகிறது. (அ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 20.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.